# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 142 | புதன்கிழமை Wednesday | 19.08.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# இந்து சமய அறநிலையத்துறையில் 80 பேருக்கு பணி நியமன ஆணை

## முதலமைச்சர் விஜய் வழங்கினார்



விருதுநகர் மாவட்டம், இருக்கன்குடி, அருள்மிகு மாரியம்மன் திருக்கோவிலில் ரூ. 23 கோடியே 67 லட்சம் செலவில் பக்தர்களுக்காகக் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை முதல் அமைச்சர்திறந்துவைத்துள்ளார்.

இந்து சமய அறநிலையத்துறைக்கு உதவிப் பொறியாளர் (கட்டுமானம்), உதவி ஸ்தபதி மற்றும் செயல் அலுவலர் பணியிடங்களுக்குத் தெரிவுசெய்யப்பட்ட 80 நபர்களுக்குப் பணிநியமனஆணைகளைதமிழ்நாடு முதல்-அமைச்சர் விஜய் அவர்கள் வழங்கினார்.

தமிழ்நாடு முதல்-அமைச்சர் விஜய் அவர்கள் இன்று (18.8.2026) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத் துறைசார்பில்,விருதுநகர் மாவட்டம், இருக்கண்குடி, அருள்மிகு மாரியம்மன் திருக்கோவிலில், ரூ.23 கோடியே 67 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள முடிகாணிக்கை மண்டபம்,அன்னதானக் கூடம், விருந்து மண்டபங்கள் மற்றும் 235 பூஜைப் பொருட்கள் விற்பனை நிலையங்கள் ஆகியவற்றைத் திறந்து வைத்தார்.மேலும்,இந்து சமய அறநிலையத்துறைக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் உதவிப் பொறியாளர் (கட்டுமானம்),உதவி ஸ்தபதி மற்றும் செயல் அலுவலர் (நிலை-1 மற்றும் நிலை-3) ஆகிய பணியிடங்களுக்குத் தெரிவுசெய்யப்பட்ட 80 நபர்களுக்குப் பணிநியமனஆணைகளைவழங்கினார்.

விருதுநகர் மாவட்டம், இருக்கன்குடி, அருள்மிகு மாரியம்மன் திருக்கோவிலில் பக்தர்களின் கோரிக்கையை ஏற்று 23 கோடியே 67 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள முடிகாணிக்கை மண்டபம்,125 நபர்கள் ஒரேநேரத்தில் அமர்ந்து உணவருந்தும் வகையிலான அன்னதானக் கூடம், 25 நபர்கள் அமர்ந்து உணவருந்தும் வகையிலான 24 விருந்து மண்டபங்கள் மற்றும் 235 பூஜைப் பொருட்கள் விற்பனை நிலையங்கள் ஆகியவற்றைப் பக்தர்களின் பயன்பாட்டிற்கு தமிழ்நாடு முதல்-அமைச்சர் இன்று திறந்து வைத்தார்.

பணி நியமன ஆணைஇந்து சமய அறநிலையத்துறை நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள சமய நிறுவனங்களை நிர்வகித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல், சொத்துகளைப் பாதுகாத்தல் போன்ற பணிகளை மேற்கொண்டுவரும் அலுவலர் மற்றும் பணியாளர் பணியிடங்களில் அவ்வப்போது ஏற்படும் காலிப்பணியிடங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நிரப்பப்பட்டு வருகின்றன.

அந்தவகையில்,தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தெரிவுசெய்யப்பட்ட 36 உதவிப் பொறியாளர்கள் (கட்டுமானம்), 38 உதவி ஸ்தபதிகள், 6 செயல் அலுவலர்கள் (நிலை-1 மற்றும் நிலை-3) என மொத்தம் 80 நபர்களுக்கு தமிழ்நாடு முதல்-அமைச்சர் பணிநியமன ஆணைகளை வழங்கி வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்.

இந்து சமய அறநிலையத் துறைக்காக முதன்முறையாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் உதவிப் பொறியாளர் (கட்டுமானம்) மற்றும் உதவி ஸ்தபதி பணியிடங்களுக்குத் தெரிவுசெய்யப்பட்டு பணிநியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியில்,இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ், தலைமைச் செயலாளர் சாய்குமார், ஐ.ஏ.எஸ்., வணிகவரி, பதிவுத்துறை மற்றும் அறநிலையங்கள் துறை செயலாளர் குமரகுருபரன்,ஐ.ஏ.எஸ்., இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் வினய், ஐ.ஏ.எஸ்., கூடுதல் ஆணையர்கள் துரை ரவிச்சந்திரன், ஐ.ஏ.எஸ்., ஜெயராமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# "முதல்வர் காலை உணவுத் திட்டத்தின் பெயரை மாற்றியது ஏன்?"

## சட்டப்பேரவையில் தி.மு.க. முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு கேள்வி



சென்னை: "முதல்வர் காலை உணவுத் திட்டத்தின் பெயரை மாற்றியது ஏன்? புதிய திட்டம் ஒன்றை உருவாக்கி அதற்கு காமராஜர் பெயர் வைத்தால், அதை நாங்களே வரவேற்றுப் பாராட்டுவோமே. முதல்வர் என்பது பொதுவானதுதானே?" என முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் திமுக முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு பேசுகையில், "காமராஜருக்கு சென்னையில் சிலை அமைத்து பிரதமர் நேருவை அழைத்துவந்து திறந்து வைத்தோம். குடியாத்தம் தொகுதியில் காமராஜரை எதிர்த்து திமுக வேட்பாளரை நிறுத்தாதவர் அண்ணா. காமராஜருக்கு சிலை அமைத்து, மணிமண்டபம் அமைத்தவர் கருணாநிதிதான். பெருந்தலைவர் காமராஜரின் பிறந்தநாளை 'கல்வி வளர்ச்சி நாள்'-ஆக அறிவித்து பெருமை சேர்த்தார் கருணாநிதி.

முதல்வர்காலைஉணவுத் திட்டம் பெயரை மாற்றியது ஏன்? புதிய திட்டம் ஒன்றை உருவாக்கி அதற்கு காமராஜர் பெயர் வைத்தால், அதை நாங்களே வரவேற்றுப் பாராட்டுவோமே. முதல்வர் என்பது பொதுவானது தானே?ஸ்டாலின் காலை உணவுத் திட்டம் எனப் பெயர்வைக்கலாம்எனக் கூறியபோது ஸ்டாலின் அதை மறுத்தார். "முதல்வர் காலை உணவுத் திட்டம் என பெயர் வைத்தால் யாரும் அந்தப் பெயரை மாற்ற மாட்டார்கள்," என ஸ்டாலின் கூறினார். நாங்கள் உருவாக்கிய திட்டத்துக்கு நீங்கள் ஏன் பெயரை மாற்ற வேண்டும் என்பதே கேள்வி. சென்னை வள்ளுவர் கோட்டம் முதல் கன்னியாகுமரி திருவள்ளுவர் சிலை வரை கருணாநிதியின் அடையாளம் இல்லாத ஊரே இல்லை. அரசு அதிகாரிகளுக்கு எண்ணற்ற திட்டங்கள் செய்தவர்; பணிக்காலத்தில் உயிரிழக்கும் அரசு ஊழியர்களின் வாரிசுகளுக்கு அரசுப் பணி வழங்கியவர்; அரசு ஊழியர்களுக்கு மத்திய அரசுக்கு நிகராக ஊதியத்தை உயர்த்தியவர் கருணாநிதி. காரல் மார்க்ஸுக்குச் சிலை வடித்த பெருமை திமுகவுக்கு உண்டு.

முதல்வர் அலுவலகத்தை மாற்ற வேண்டிய அவசியம் என்ன? இந்த டெண்டரில் முறைகேடு உள்ளதாக நாளிதழில் செய்தி வெளியாகி உள்ளது. நாங்கள் தூய்மையானவர்கள் என்றீர்கள்; ஆனால், பணிகளைத் தொடங்கிய பிறகு இணையதளத்தில் டெண்டர் வெளியிடப்பட்டுள்ளதாக நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறைக் கொள்கை விளக்கக்குறிப்பில்திமுக அறிவித்த திட்டங்களில் நிலுவையில் உள்ள திட்டங்கள் மட்டுமே உள்ளன. புதிய திட்டங்கள் குறித்து எந்த அறிவிப்பும் இல்லை. தந்தை பெரியாரைக் கொள்கைத் தலைவராக ஏற்றுக்கொண்டுள்ள நீங்கள், கடந்த மூன்று மாதங்களாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ள கோவை பெரியார் நூலகத்தை ஏன் இன்னும் திறக்காமல் இருக்கிறீர்கள்? இப்பொழுது சட்டப்பேரவையில் இருக்கும் இந்த கலைநயத்தோடு கூடிய மேசைகளும், மைக்குகளும் திமுக ஆட்சியின்போது பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த நான் இரவு பகலாக பார்த்து பார்த்துச் செய்தது" இவ்வாறு அவர் கூறினார். இதற்கு பதிலளித்த பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன், "அரசு திட்டங்களின் பெயர்கள் மாற்றப்பட்டதை பலர் சுட்டிக்காட்டுகிறார்கள். 1996-ல் திமுக ஆட்சி காலத்தில் ஜெ.ஜெ.சினி சிட்டி என்ற பெயர் எம்ஜிஆர் திரைப்பட நகர் என மாற்றப்படுவதாக கருணாநிதி அறிவித்தார்.

அம்மா பசுமை வீடு, கலைஞர் கனவு இல்லம் திட்டம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அம்மா மருந்தகம் முதல்வர் மருந்தகம் என மாற்றப்பட்டது; அம்மா மினி கிளினிக் முதல்வர் கிளினிக் என மாற்றப்பட்டது. காலை உணவு திட்டத்துக்கு காமராஜர் பெயரைவிட பொருத்தமான பெயர் இருக்க முடியாது" என்று பதிலளித்தார்.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்



Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt


### 3 தமிழர் கொலை விவகாரம்:

# "கர்நாடக மாநில நிர்வாகத்தில் தமிழகம் தலையிடக்கூடாது"

## முதலமைச்சர் டி.கே.சிவகுமார் பேட்டி



பெங்களூரு: "எந்த மாநிலமும் மற்ற மாநிலத்தின் நிர்வாக விஷயத்தில் தலையிடக் கூடாது," என்று கர்நாடக முதல்வர் டி.கே. சிவகுமார் வலியுறுத்தியுள்ளார்.

பெங்களூருவில் செய்தியாளர்களிடம் பேசிய டி.கே.சிவகுமாரிடம், கர்நாடக வனத்துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூடு குறித்து தமிழக தலைவர்கள் வெளி யிட்ட கருத்துகள் பற்றி கேள்வி எழுப்பப்பட்டது. அதற்குப் பதில் அளித்த முதல்வர் டி.கே. சிவகுமார், "ஒரு மாநிலத்தின் நிர்வாகத்தில் மற்றொரு மாநிலம் தலையிடக் கூடாது. ஓ. பன்னீர்செல்வம் அல்லது வேறு யாராக இருந்தாலும் இந்த அடிப்படைப் புரிதலைக் கொண்டிருக்க வேண்டும். தமிழ்நாட்டில் உள்ள சட்டம்-ஒழுங்கு விவகாரங்களில் என்னால் தலையிட முடியாது. ஒவ்வொரு மாநிலத்திற்கும் அதற்கே உரிய பிரச்சினைகள் உள்ளன. நமது மாநிலத்தை எப்படிக் காப்பது என்பது நமக்குத் தெரியும் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் தங்கள் பணியைச் செய்யட்டும், நாம் நமது பணியைச் செய்வோம். அவர்களின் நிர்வாகத்தில் தலையிட நான் விரும்பவில்லை. நமது மாநிலத்தின் கண்ணியத்தைக் காக்க வேண்டியது அவசியம். அவர்கள் தங்கள் பணியைச் செய்ய வேண்டும்; நாம் நமது பணியைச் செய்ய வேண்டும்." என்று தெரிவித்தார். கர்நாடக மாநிலம் சாம்ராஜநகர் மாவட்டம் ஹனூர் அருகேயுள்ள காவிரி வனவிலங்கு சரணாலய பகுதியில் கடந்த 15-ம் தேதி அதிகாலையில் மானை வேட்டையாடியதாக அந்தோணிசாமி (50), ஜான்ரோஸ் பீட்டர் (42), லாசர் குமார் (33) ஆகிய மூவரும் அம்மாநில வனத்துறையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்த சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியதை தொடர்ந்து, வனத்துறை அலுவலகங்கள் சூறையாடப்பட்டன.

கர்நாடக வனப்பகுதியில் சுட்டுக்கொல்லப்பட்ட 3 தமிழர்களின் உடல்களும் இறுதி திருப்பலிக்கு பின்னர், அவர்களின் சொந்த கிராமங்களில் நேற்று அடக்கம் செய்யப்பட்டன. இந்த சம்பவம் குறித்து தமிழக அரசியல் தலைவர்கள் பலரும் கடும் கண்டனம் தெரிவித்திருந்தனர். இந்த விவகாரம் தொடர்பாகதமிழகஅரசு, கர்நாடக அரசிடம் விளக்கம் கேட்க வேண்டும் என்றும், இந்த விவகாரம் குறித்து சிபிஐ விசாரணைக்கு உத்தரவிடப் பட வேண்டும் என்றும் வலியுறுத்தினர். இந்நிலையில், இதற்கு பதில் அளிக்கும் விதமாக கர்நாடக முதல்வர் டி.கே. சிவகுமார் பேசியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### கோவை மதுக்கரை மற்றும் குரும்பபாளையம் பகுதியில் ஏற்படும்

# காற்று மாசுபாடு காரணமாக, குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அவதிக்கு உள்ளாகும் நிலை!

## தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என ஏசிசி சிமெண்ட் ஆலை மேளாளரிடம் பேச்சுவார்த்தை



கோவை மதுக்கரை பகுதியில் அதானி குழுமத்தினருக்கு சொந்தமான சிமெண்ட் ஆலை, ஏசிசி எனும் பெயரில் இயங்கி வருகிறது சுமார் 90 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த ஆலை இந்த பகுதியில் உள்ளது. தற்பொழுது இந்த ஆலையை சுற்றிலும், குடியிருப்பு வீடுகள், அடுக்குமாடி குடியிருப்புகள், வில்லாக்கள், என சுமார் 5000த்திற்க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். இந்த நிலையில் இன்று, மதுக்கரை, குரும்பபாளையம் கிராம பொதுமக்கள் ஏசிசி ஆலை மேலாளரை சந்தித்து தாங்கள் அனுபவித்து வரும் பல்வேறு கோரிக்கைகளைஎளை எடுத்து கூறினர்.

அதில் சிமெண்ட் ஆலையிலிருந்து வெளியேறும் புகை மற்றும் தூசிகளால் ஏற்படும் பாதிப்புகளைக் கட்டுப்படுத்தக் வேண்டும், பல தலைமுறைகளாக வாழ்ந்து வரும் பொதுமக்கள், ஆலையில், இருந்து தொடர்ந்து வெளியேறும் அதிகப்படியான புகை மற்றும் சிமெண்ட் தூசிகளால் எங்கள் கிராமம் ஒட்டுமொத்தமாகப் பாதிக்கப்பட்டுள்ளதுதற்போது இதன் பாதிப்பு மிக அதிகமாக உள்ளது. இதனால் எங்கள் ஊர் மக்களுக்கு சுவாசக் கோளாறுகள் மற்றும் ஆஸ்துமா, இருதயப் பிரச்சனைகள்,

கண் எரிச்சல், மற்றும் தோல் நோய்கள் போன்ற கடுமையான உடல்நலப் பாதிப்புகள் தொடர்ந்து ஏற்பட்டு வருகின்றன.

மேலும், இப்பகுதியில் உள்ள குடிநீர் நிலைகள் மாசடைந்துள்ளன. விவசாய நிலங்களில் சிமெண்ட் தூசி படிவதால் விவசாயம் பாழாகிறது. கால்நடைகளும் இந்த மாசடைந்த காற்றினாலும், தீவனத்தினாலும் பெரிதும் பாதிக்கப்படுகின்றன எனவே, தாங்கள் தயவுசெய்து உடனடியாகதலையிட்டு,ஆலையிலிருந்து வெளியேறும் புகைமற்றும்தூசிகளைக் கட்டுப்படுத்த உரிய நவீனத்தொழில்நுட்பநடவடிக்கைகளை எடுக்க வேண்டும். எங்கள் ஊர் மக்களையும், விவசாயம், குடிநீர் மற்றும் கால்நடைகளையும் இந்த சிமெண்ட் புகை பாதிப்பில் இருந்து மீட்க ஆலை சார்மாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு கொண்டதுடன் ஒரு வார காலத்திற்குள் இதனை சரி செய்ய வில்லை என்றால் மக்களை திரட்டி ஆலைக்கு எதிராக போராட்டத்தை நடத்த இருப்பதாகவும் தெரிவித்தனர்.

# சுதந்திரம் பெற்று 80 ஆண்டுகள் ஆகியும் பஸ் வசதி இல்லாத கள்ளம்புளி கிராமம்; உடனடியாக பஸ் வசதி வழங்க கோரிக்கை



தென்காசி மாவட்டம் பொய்கை ஊராட்சியில் உள்ள கள்ளம்புளி கிராமத்தில் சுமார் 5000 பேர் வசித்து வருகின்றனர். இங்குள்ள பொதுமக்கள் கல்வி,விவசாயம்,வணிகம், மற்றும் மருத்துவ தேவைகளுக்கு அருகே உள்ள தாய் கிராமமான சுரண்டை நகராட்சி பகுதிக்கு சென்று வருகின்றனர் அதிலும் இளம் பெண்கள் கல்லூரி கல்வியை பயில சுரண்டை காமராஜர் அரசு கல்லூரியிலும் மேலும் சுமார் 100 பெண்கள் மற்றும் ஆண்கள் சுரண்டையில் உள்ள வணிக நிறுவனங்கள் மற்றும் மருத்துவமனைகளிலும் பணி புரிந்து வருகின்றனர். ஆகவே தினமும் கள்ளம்புளியில் இருந்து சுரண்டைக்கு சென்று வருவதை வாடிக்கையாக கொண்டுள்ளனர்.

ஆனால் கள்ளம்புளியில் இருந்து சுரண்டைக்கு நேரடி அரசு பஸ்கள் இல்லை ஏற்கனவே சுமார் 15 வருடங்களுக்கு முன்பு சுரண்டைக்கு இயக்கப்பட்டு வந்த அரசு பஸ்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

இதனால் கல்வி மற்றும் பணிக்காகவும் அவசர மருத்துவ சிகிச்சை பெறவும் சுரண்டை செல்ல சுமார் 3 கிமீ தூரத்தில் உள்ள கோவிலாண்டனூருக்கு நடந்து சென்றுசுரண்டைசெல்ல வேண்டிய நிலை உள்ளது. மேலும் இரவு 7 மணிக்கு மேல் கடுமையான இருட்டில் பெண்கள் பாதுகாப்பு இல்லாமல் நடந்து வரும் சூழல் நிலவுகிறது.

ஆகவே கள்ளம்புளி பகுதி விவசாயிகள், பெண்கள் கல்லூரி மாணவிகள் நலன் கருதி கடையநல்லூரில் இருந்து கோவிலாண்டனூர் வழியாக சுரண்டை வரை இயக்கப்படும் தடம் எண் 41ஏ. 41பி, 41சி பேருந்துகளில் சிலவற்றை கள்ளம்புளி வரை வந்து திரும்பி சுரண்டை மற்றும் கடையநல்லூர் செல்ல இயக்கவும், சுரண்டையில் இருந்து சாம்பவர்வடகரை, வேலாயுதபுரம், கள்ளம்புளி, சேர்ந்தமரம் வழியாக சங்கரன்கோவிலுக்கும் மறு மார்க்கத்தில் சுரண்டைக்கும் அரசு பஸ்கள் இயக்க இப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் அரசு நடவடிக்கை எடுக்குமா?



### அரசு பள்ளிகளிலும் மாணவ மாணவிகளுக்கு ஆண்டுதோறும் கட்டாய கல்வி சுற்றுலாவிற்கு அழைத்து வர தமிழக அரசுக்கு கோரிக்கை

இந்தியாவின் தென்கோடி முனையில் அமைந்துள்ள சர்வதேச சுற்றுலாத்தலமான கன்னியாகுமரியில் கடல் நடுவில் வீற்றிருக்கும் 133 அடி உயரம் கொண்ட திருவள்ளுவர் சிலைக்கு அவரது பெருமையை போற்றும் விதமாக தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு பள்ளிகளிலும் மாணவ மாணவிகளுக்கு ஆண்டுதோறும் கட்டாய கல்வி சுற்றுலாவிற்கு அழைத்து வர அறிவிப்பு வழங்க வேண்டும் என தமிழக வெற்றி கழக ஆட்சி 100 நாள் நிறைவடைந்த இந்த நாளில் தமிழ்க அரசுக்கு சமூக ஆர்வலர்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

# ரேஷன் அட்டையுடன் ஆதாரை இணைக்காவிட்டால் உதவித்தொகை நிறுத்தம்

## புதுச்சேரி அரசு உத்தரவு



புதுச்சேரி அரசு குடிமைப் பொருள் வழங்கல் துறை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், "புதுச்சேரியில் ரேஷன் கடைகள் மூலம் அரிசி வழங்குவதற்குப் பதிலாக, பயனாளிகளின் வங்கி கணக்கில் நேரடி மானிய உதவித்தொகை வரவுவைக்கப்பட்டுவருகிறது. தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் மற்றும் மத்திய அரசின் உணவு மற்றும் பொது விநியோகத் துறை சார்பில் செயல்படுத்தப்படும் 'பிரதான் மந்திரி கரிப் கல்யாண் அன்ன யோஜனா' ஆகிய திட்டங்களின் கீழ் இந்த மாதாந்திர உணவு தானிய மானியம் வழங்கப்படுகிறது.

இதன் தொடர்ச்சியாக, புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் மத்திய வங்கி டிஜிட்டல் நாணய முறை (CBDC) கடந்த பிப்ரவரி 26ஆம் தேதி அன்று முறைப்படி அறிமுகப்படுத்தப்பட்டது. அதனைத்தொடர்ந்து கடந்த 3 மாதங்களாக நியாய விலைக் கடைகள் வாயிலாக சிறப்பு முகாம்கள் மற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, இதுவரை 1.6 லட்சம் பயனாளிகள் தங்கள் கைப்பேசி எண்களைப் பதிவு செய்து, கணக்குடன் இணைத்துள்ளனர்.

இதில் முதற்கட்டமாக 1.02 லட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு ஜூன் 2026-க்கான உணவு தானிய மானியம் மத்திய வங்கி டிஜிட்டல் நாணய முறையில் நேரடியாக வரவு வைக்கப்பட்டு, அவர்களுக்கான டிஜிட்டல் வாலட்களும் (Digital Wallets) வழங்கப்பட்டுள்ளன. இதுவரை தங்கள் ரேஷன் அட்டைகளுடன் கைப்பேசி எண்கள் மற்றும் ஆதார் விவரங்களை இணைக்காத பயனாளிகள், வரும் ஆகஸ்ட் 21ஆம் தேதிக்குள் அருகில் உள்ள நியாய விலை கடைகள் அல்லது குடிமைப் பொருள் வழங்கல் துறை அலுவலகத்தை அணுகி, உடனடியாக இணைத்துக் கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# பசிபோக்கும் தளம் தென் பொதிகை டிரஸ்ட் சார்பில் தென்காசியில் 700 பேருக்கு அன்னதானம்

தென்காசி அரசு தலைமை மருத்துவமனை வளாகத்தில், இலஞ்சியை தலைமையிடமாகக் கொண்ட பசிபோக்கும் தளம் - தென்பொதிகை டிரஸ்ட் சார்பில் 80-வது சுதந்திர தினத்தை முன்னிட்டு அன்னதான சேவை நடைபெற்றது.

தலைமை ஒருங்கிணைப்பாளர் மாரியப்பன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பொதுமக்கள், நோயாளிகள், கர்ப்பிணித் தாய்மார்கள், குழந்தைகள் மற்றும் முதியோர் உள்ளிட்ட 700 பேருக்கு உணவு வழங்கப்பட்டது.

முன்னதாக தேசியக் கொடிகள் வழங்கப்பட்டு, சுதந்திரப் போராட்ட தியாகிகள் குறித்து விளக்கவுரை நடைபெற்றது.

நிகழ்ச்சியில் பங்கேற்ற தன்னார்வலர்களுக்கு டிரஸ்ட் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது.



தமிழகத்தில் முதலமைச்சர் விஜய் தலைமையிலான தமிழக வெற்றி கழக அரசு பொறுப்பேற்று (செவ்வாய்க்கிழமை) 100 நாட்கள் நிறைவடைகிறது. இதையொட்டி, அரசின் மக்கள் நலத் திட்டங்கள் மற்றும் சாதனைகளை விளக்கும் விழிப்புணர்வு பிரச்சாரம் குமரி மாவட்டத்தில் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இதில் தமிழக வெற்றி கழக முக்கிய நிர்வாகியுமான பால்ராஜ் முன்னெடுப்பில், பல்வேறு பகுதிகளில் த.வெ.க. அரசின் 100 நாள் சாதனைகளை பொதுமக்களிடம் கொண்டு சேர்க்கும் களப்பணிகள் நடைபெற்று வருகின்றன.ஒரு பகுதியாக, நாகர்கோவில் வடசேரி பேருந்து நிலையத்தில் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி, சாதனை விளக்கத் துண்டுப் பிரசுரங்கள் வினியோகிக்கும் பிரம்மாண்ட நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. தமிழக வெற்றி கழக முக்கிய நிர்வாகியுமான பால்ராஜ் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், குமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவன் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். பொதுமக்கள், பயணிகள் மற்றும் வணிகர்களுக்கு இனிப்புகளை வழங்கி, துண்டுப் பிரசுர வினியோகத்தை மாவட்டச் செயலாளர்மாதவன்தொடங்கிவைத்தார். தொடர்ந்து, பேருந்துநிலையவளாகம்மற்றும்அதனைச்சுற்றியுள்ளபகுதிகளில் முதற்கட்டமாக 5ஆயிரத்துக்கும்மேற்பட்ட பொதுமக்களுக்கு அரசின்சாதனைகள் அடங்கிய துண்டுப்பிரசுரங்கள் மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டன. கட்சியின் மாவட்ட, ஒன்றிய, நகர நிர்வாகிகள் பலரும் திரளாகக் கலந்து கொண்ட இந்நிகழ்ச்சி, பொதுமக்களின் சிறப்பான வரவேற்பைப் பெற்றது.

# மாறாந்தை பள்ளியில் சுதந்திர தின விழா: டாக்டர் இம்மானுவேல் பங்கேற்பு



மாறாந்தை பள்ளியில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் நம்ம டாக்டர் இம்மானுவேல் பங்கேற்று பேசும் போது, வறுமையற்ற, லஞ்சமற்ற இந்தியாவை உருவாக்க மாணவர்கள் உறுதியேற்க வேண்டும் என்றார்.

தென்காசி மாவட்டம், மாறாந்தையில் உள்ள அரசு பள்ளியில் 80வது சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது. பள்ளி தலைமை ஆசிரியர் சுப்புலட்சுமி தலைமை வகித்தார்.

பள்ளி நிர்வாகி சிவபொன்ராஜ் வரவேற்றார். பாரத் ஸ்கேன்ஸ் நிறுவனர் நம்ம டாக்டர் இம்மானுவேல் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு தேசிய கொடியேற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து மாணவர்களுக்கு இனிப்புகள் வழங்கியதுடன், வாட்டர் பாட்டில்கள், பள்ளிக்கு இருக்கைகள் வழங்கி பேசினார்.

இந்நிகழ்ச்சியில் உதவி ஆசிரியர்கள் பேச்சியப்பன். இசக்கியம்மாள், விரோனிக்கா மற்றும் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

# ஆலங்குளம் ஹு ஷாசா கோ இஷின்ர்யூ கராத்தே அகாடமியில் 80வது சுதந்திர தின விழா



தென்காசி மாவட்டம், ஆலங்குளம் ஹு ஷாசா கோ இஷின்ர்யூ கராத்தே அகாடமி வளாகத்தில் 80-வது சுதந்திர தின விழா சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு அகாடமி நிறுவனர் மற்றும் முதன்மை பயிற்சியாளர் தாஷி கோபி தலைமை வகித்து, மூவர்ண தேசியக் கொடியை ஏற்றி வைத்து மாணவ, மாணவிகளுக்கு இனிப்புகளை வழங்கினார். தொடர்ந்து, அகாடமி மாணவி பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் 471 மதிப்பெண்கள் பெற்று நம்ம அகாடமிக்கு பெருமை சேர்த்துள்ளார் மாணவி மகா பிரிய தர்ஷினிக்கு பொன்னாடை அணிவித்து, பரிசுகள் வழங்கி பாராட்டினார். அகாடமி, மாணவிகள், பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சுதந்திர தின விழாவை சிறப்பித்தனர்.

# டெல்லி நீட் போராட்டத்தில் காவல் துறை அத்துமீறலா? விசாரணைக் குழு அமைத்து உச்ச நீதிமன்றம் நடவடிக்கை



புதுடெல்லி: டெல்லியில் நீட் தேர்வு முறைகேடுகளைக் கண்டித்து கரப்பான்பூச்சி ஜனதா கட்சியினரும், இளைஞர்களும் நடத்திய பேரணியின்போது காவல் துறையினர் வன்முறையில் ஈடுபட்டதாக எழுந்துள்ள புகார் குறித்து விசாரிக்க ஒரு குழு அமைக்க இருப்பதாக உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது.

நீட் தேர்வு வினாத்தாள் கசிந்ததை அடுத்து, அந்த தேர்வை ரத்து செய்த மத்திய அரசு மறு தேர்வை நடத்தியது. நீட் தேர்வு கசிவில் நடந்த முறைகேடுகளைக்கண்டித்து கரப்பான்பூச்சி ஜனதா கட்சியினர் டெல்லி ஜந்தர் மந்தரில் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

இதன் தொடர்ச்சியாக, ஜூலை 20 அன்று நாடாளுமன்றத்தை நோக்கி அவர்கள் பேரணி நடத்தினர் . காவல் துறை அனுமதி இன்றி பேரணியாகச்செல்லமுயன்ற தால் அவர்களை போ லீஸார் தடுத்து நி றுத்தினர். அப்போது, இருதரப்புக்கும்இடையே மோதல் ஏற்பட்டது.

கூட்டத்தைக் கலைக்கப் பாதுகாப்புப் படையினர்தடியடி மற்றும்கண்ணீர்ப் புகைக் குண்டுகளைப் பயன்படுத்தினர். பெல்லட் குண்டுகள் பயன்படுத்தப்பட்டதாகவும் புகார் எழுந்தது.

இந்நிலையில், மாணவர்கள் நடத்திய பேரணியின்போது காவல் துறை அத்துமீறலில் ஈடுபட்டதாக எழுந்த புகார்களை விசாரிக்க ஒரு குழுவை அமைக்கவுள்ளதாக உச்ச நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை தெரிவித்தது. முன்னாள் நீதிபதிகள், முன்னாள் சிபிஐ இயக்குநர் மற்றும் முன்னாள் மாநில டிஜிபி (DGP) ஆகியோர் இந்தக் குழுவில் இடம்பெறுவார்கள் என்று நீதிமன்றம் கூறியுள்ளது.மேலும்,ஜூலை 20 அன்று நடைபெற்ற நாடாளுமன்றப் பேரணியின் வீடியோ காட்சிகளை ஆய்வுக்காக அக்குழுவிடம் ஒப்படைக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

போராட்டங்களின்போது அதிகப்படியான பலப்பிரயோகம் செய்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளை டெல்லி காவல் துறை மறுத்துள்ளநிலையில்,மாணவர் போராட்டக்காரர்கள் மீது காவல் துறை மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்த புகார்களை இந்தக் குழு விசாரிக்க உள்ளது.

இந்த உயர்மட்டக் குழுவை முறைப்படி அமைப்பதற்கான உத்தரவு புதன்கிழமை பிறப்பிக்கப்படும் என்று தலைமை நீதிபதி சூர்யா காந்த் மற்றும் நீதிபதிகள் ஜாய்மால்யா பாக்சி, வி. மோகனா ஆகியோர் அடங்கிய அமர்வு தெரிவித்துள்ளது.

ஜூலை 20 போராட்டத்தின்போதும் பிற பகுதிகளிலும் தாங்கள் குறிவைக்கப்பட்டதாகக் குற்றம் சாட்டிய பெண் போராட்டக்காரர்களின் புகார்களையும் இந்தக் குழு விசாரிக்கும். பேரணியின்போது நடந்த வன்முறை மற்றும் காவல் துறையின் நடவடிக்கைகள் குறித்த வீடியோ காட்சிகள் மற்றும் சிசிடிவி பதிவுகளை நீதிமன்றம் ஆய்வு செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது பதிவுசெய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கைகள் (FIR) குறித்த விவரங்களை வழங்குமாறு சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தாவிடம் அந்த உச்ச நீதிமன்ற அமர்வு கேட்டுக் கொண்டது.இவ்வழக்குகளில் நிவாரணம் வழங்க அரசியலமைப்பின் 142-வது பிரிவின் கீழ் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்துவது குறித்து நீதிமன்றம் பரிசீலிக்கக்கூடும் என்றும் உச்ச நீதிமன்ற அமர்வு தெரிவித்துள்ளது.

அரசியலமைப்பின் 19-வது பிரிவின் கீழ் மாணவர்களின் போராடுவதற்கான உரிமை பாதுகாக்கப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டிய நீதிமன்றம், அவர்கள் மீதான குற்றவியல் வழக்குகள் அவர்களின் வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கம் குறித்தும் கவலை தெரிவித்தது.

# சுற்றுலா பயணிகள் பொதுமக்கள் கவனத்திற்கு...




தென்காசி புதிய பேருந்து நிலையத்தில் கடந்த 16ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று சுமார் 50 கிராம் மதிப்புள்ள தங்க பொருட்களும்,

தென்காசி அருள்மிகு காசி விஸ்வநாதர் ஆலய வளாகத்தில் சுமார் 16 கிராம் தங்க சங்கிலியும் அங்குள்ள நல்ல உள்ளம் படைத்தவர்களால் கண்டெடுக்கப்பட்டு தென்காசி காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. குற்றாலம் சுற்றுலாவந்தசுற்றுலாபயணிகள்யாரும்தங்களதுநகைகளைதவறவிட்டிருந்தால் உரியஆவணங்களோஅடையாளங்களோசொல்லிதென்காசிகாவல்நிலையத்தில் நகைகளை பெற்றுக் கொள்ளலாம் என காவல்துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அச்சிறுப்பாக்கம் அருகே உள்ள காட்டுக்கரணை கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ தர்மராஜா திரௌபதியம்மன் ஆலய கொடியேற்றி காப்புக்கட்டும் வைபவம் சுமார் 26 ஆண்டுகளுக்கு பின்பு கிராமத்தில் எழுந்தருள் பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ திரௌபதியம்மன் ஆலயத்தில் அதிகாலை 4.30 மணியளவில் வெகு விமர்சையாக நடைபெற்றது அதனைத் தொடர்ந்துஅனுதினமும்அம்மனுக்குஆராதனைநடைபெறுவதுவழக்கம்இந்நிகழ்ச்சியில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்

# ஈரோடு கைத்தறி கூட்டுறவு சங்கங்களில் ரூ.50 கோடி மதிப்பிலான ஜவுளிகள் தேக்கம்



ஈரோடு: கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் கடந்த இரு மாதமாக கொள்முதல் செய்வதை நிறுத்தி உள்ளதால், ஈரோடு மாவட்ட கைத்தறி கூட்டுறவு சங்கங்களில் ரூ.50 கோடி மதிப்பிலான ஜவுளிகள் தேங்கி உள்ளதாக புகார் எழுந்துள்ளது.

இதுகுறித்து கைத்தறி நெசவாளர்கள் கூறியதாவது: ஈரோடு மாவட்டத்தில் சென்னிமலை, பவானி, தாண்டாம்பாளையம், சிவகிரி, கவுந்தப்பாடி, விஜயமங்கலம், அவல்பூந்துறை, சத்தியமங்கலம் ஆகிய பகுதிகளில் 190 கைத்தறி கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன. இங்கு 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்களால், பெட்ஷீட், தலையணை உறைகள், மெத்தை விரிப்புகள்,துண்டு ரகங்கள், வீட்டு உபயோக துணி வகைகள், மேட் ரகங்கள், ஜமக்காளம் என ஜவுளி ரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

பிரதம கைத்தறி கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் ஜவுளிகள் கொள்முதல் செய்யப்பட்டு, நாடு முழுவதும் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்படுகின்றன. இதற்காக சென்னிமலை மற்றும் ஈரோடு பகுதியில் கோ-ஆப்டெக்ஸ் கொள்முதல் நிலையங்கள் செயல்படுகின்றன. கோ-ஆப்டெக்ஸ் நிர்வாகம் பிரதம சங்கங்களுக்கு உற்பத்தி இலக்கு கொடுத்துள்ளனர்.

பிரதம கைத்தறி சங்கங்களும்நூல்கொடுத்து நெசவு செய்து வரும் நிலையில் கடந்த இரு மாதங்களாக ஜவுளி கொள்முதலை திடீரென நிறுத்தி உள்ளனர். ஈரோடு மாவட்டத்தில் உள்ள பிரதம கைத்தறி கூட்டுறவு சங்கத்தில் ரூ.50 கோடி மதிப்பிலான ஜவுளி ரகங்கள் தேக்கமடைந்துள்ளன.

கூட்டுறவு வங்கியில் கடன் பெற்று உற்பத்தி செய்து வைத்துள்ள ஜவுளிகளை கொள்முதல் செய்யாமல் இருந்தால், கைத்தறி நெசவாளர்களுக்கு வேலை வழங்க முடியாத நிலை ஏற்படும். கூட்டுறவு சங்கத்தை நம்பி வாழும் கைத்தறி நெசவாளர்களின் வாழ்வு பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக பெட்ஷீட், போர்வை ரகங்கள்,மேட், ஜமக்காளம் கொள்முதல் முற்றிலும் நிறுத்தப்பட்டுள்ளது.

சென்னிமலை பகுதியில் உற்பத்தி செய்யப்படும்பெட்ஷீட்,போர்வைகளை நாடு முழுவதும் விற்பனை செய்ய சென்னிமலை, சென்டெக்ஸ் கைத்தறி சங்க நிறுவனர் நாச்சிமுத்து என்பவரால் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் 1935-ம் ஆண்டு தொடங்கப்பட்டு, அதில் 1952-ம் ஆண்டு முதல் தலைவராக 17 ஆண்டுகள் பணியாற்றி கோ-ஆப் டெக்ஸ் நிறுவனத்தின் விற்பனையை உயர்த்தினார்.

சென்னிமலை மற்றும் ஈரோடு மாவட்ட கைத்தறி சங்கங்களின் அதிக அளவு பங்களிப்புடன் உருவான கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் ஈரோடு மாவட்ட பெட்ஷீட், போர்வை விற்பனையை நிறுத்தினால் கைத்தறி நெசவாளர்கள் வேலை வாய்ப்பு இழந்து பெரிதும் பாதிப்படுவார்கள்.நிறுத்திவைத்துள்ள கோ-ஆப்டெக்ஸ்கொள்முதலை உடனடியாக தொடங்க வேண்டும், என்றனர்.

இதுகுறித்து அதிகாரிகளிடம் விசாரித்தபோது "கோ-ஆப் டெக்ஸ் நிறுவனத்தில் புதிதாக பொறுப்பேற்றுள்ள அதிகாரி, கோ-ஆப் டெக்ஸ் நிறுவனம் என்றால் சேலை மட்டும் விற்பனை செய்யும் கடை என தவறான புரிதலுடன் அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்து வருகிறார். இதன் காரணமாக கடந்த இரு மாதங்களாக மற்ற ஜவுளி பொருட்கள் கொள்முதல் நிறுத்தப்பட்டுள்ளது" என்றனர்.

# போக்குவரத்துக்கு இடையூறாக சாலையோரம் வாகனம் நிறுத்தினால் ரூ.2,000 வரை அபராதம்

## தூத்துக்குடி போக்குவரத்து போலீஸ் எச்சரிக்கை



தூத்துக்குடி மாநகரில் போக்குவரத்துக்கு பொதுமக்களுக்கு இடையூறாக விதிகளை மீறி சாலையோரம் நிறுத்தப்படும் இருசக்கர வாகனம் நான்கு சக்கர உள்ளிட்ட வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டு, அதன் உரிமையாளர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் என போக்குவரத்து காவல்துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தூத்துக்குடி மாநகரில் வாகனப் போக்குவரத்து மற்றும் மக்கள் தொகை அதிகரித்து வருவதால், முக்கிய சாலைகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வருகிறது. குறிப்பாக பள்ளிகள் அமைந்துள்ள மேற்கு ரதவீதி, ரெங்கநாதபுரம், டூவிபுரம், சண்முகபுரம், பெருமாள்புரம், புதுக்கிராமம், சங்கராபுரம், தாமரோதர நகர் மெயின் ரோடு,பக்கிள்புரம் உள்ளிட்ட பகுதிகளில் சாலையோரங்களில் விதிகளை மீறி வாகனங்கள் நிறுத்தப்படுவதாக கூறப்படுகிறது.

போக்குவரத்து பாதிப்பு ஏற்படக்கூடிய முக்கிய இடங்களில் 'நோ பார்க்கிங்' அறிவிப்புப் பலகைகள் வைக்கப்பட்டுள்ள நிலையிலும், அதனை பொருட்படுத்தாமல் வாகனங்கள் நிறுத்தப்படுகின்றன. குறிப்பாக காலை மற்றும் மாலை நேரங்களில் அதிகளவில் வாகனங்கள் நகருக்குள் வந்து செல்வதால், சாலையோரம் நிறுத்தப்படும் வாகனங்களால் போக்குவரத்து பாதிக்கப்படுவதுடன்,பிற வாகன ஓட்டிகளும் கடும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர்.

மேலும்,பள்ளி மற்றும் கல்லூரிகள் அமைந்துள்ள குறுகிய சாலைகளில்வாகனங்கள் நிறுத்தப்படுவதால் மாணவர்கள், குறிப்பாக பள்ளிக் குழந்தைகள் சாலையை கடந்து செல்லும்போது விபத்து ஏற்படும் அபாயமும் உள்ளது. இதனால் பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் பாதிக்கப்படுகின்றனர்.

இதுதொடர்பாகபோக்குவரத்து காவல்துறை அதிகாரிகள் கூறுகையில், "தூத்துக்குடியில் போக்குவரத்திற்கு இடையூறாக சாலையோரங்களில் வாகனங்களை நிறுத்துவதை தவிர்க்க வேண்டும். விதிகளை மீறி பள்ளிகள்,கல்லூரிகள் அமைந்துள்ள குறுகிய சாலைகளில் நிறுத்தப்படும் நான்கு சக்கர வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டு காவல் நிலையங்களில் நிறுத்தப்படும்.மேலும்,வாகன உரிமையாளர்களுக்கு ரூ.2ஆயிரம்வரைஅபராதம் விதிக்கப்படும்" என போக்குவரத்து காவல் ஆய்வாளர் சுனை முருகன் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து சாலையோர வாகன நிறுத்தத்தை கட்டுப்படுத்ததீவிர கண்காணிப்பு மேற்கொள்ள வேண்டும் என்றும், இப்பிரச்னைக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும் என்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கோவை ரயில் நிலைய குடிநீரில் 'பாக்டீரியா' பாதிப்பு: சிஏஜி அறிக்கையால் பயணிகள் அதிர்ச்சி



கோவை: கோவை மற்றும் கேரள மாநிலம் பாலக்காடு உள்ளிட்ட பிரதான ரயில் நிலையங்களில் குடிநீர் கூலர்களில் ஆபத்தான 'இ-கோலி பாக்டீரியாக்கள்' இருப்பது கண்டறியப்பட்டுள்ள தாக மத்திய தலைமை கணக்கு தணிக்கையாளர் (சிஏஜி) அறிக்கை மக்களவையில்தாக்கல்செய்யப்பட்டிருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

கோவை ரயில் நிலையத்தை நாளொன்றுக்கு சுமார் 60 ஆயிரத்துக்கும் அதிகமான பயணிகள் பயன்படுத்துகின்றனர். சேலம் ரயில்வே கோட்டத்தின் கீழ் இயங்கும் 94 ரயில் நிலை யங்களில், அதிக வருவாயை தரும் ரயில் நிலையமாக கோவை முதலிடத்தில் உள்ளது.

இந்நிலையில், தெற்கு ரயில்வே பயணிகள் வசதிக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் 45 சதவீதம் முதல் 77 சதவீதம் வரை முழுமையாக பயன்படுத்தவில்லை என சிஏஜி அறிக்கையில் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பயணிகளின் வசதிகள், சுகாதாரம், குடிநீரின் தரம் ஆகியவற்றில் கோவை ரயில் நிலையம் சுணக்கத்தில் இருப்பதும், குடிநீர் கூலர்களில் இருந்து சேகரிக்கப்பட்ட நீர்மாதிரியில் 'இ-கோலி பாக்டீரியாக்கள்' இருப்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ரயில் பயணிகள் சிலரிடம் பேசியபோது, "இந்தியாவில் ரயில் நிலையங்கள் ஏழை,நடுத்தர மக்களின் நம்பிக்கைக்கு உரிய போக்குவரத்து மையமாக இருக்கின்றன.

மேலும் ஆயிரக்கணக்கிலான பயணிகள் பயன்படுத்தும் ரயில் நிலையத்தின் சுகாதாரம் மற்றும் அடிப்படை வசதிகள் காப்பாற்றப்பட வேண்டும். மக்களுக்கு சுகாதாரமான வசதிகளை மேற்கொள்ள வேண்டியது அடிப்படை உரிமை. பயணிகளின் நம்பிக்கையை பாதுகாக்கும் வகையில், குடிநீரின் தரத்தை மேம்படுத்தி பாதுகாப்பாக விநியோகிக்க வேண்டும்" என்றனர்.

ரயில்வே துறை பொறியாளர்கள் கூறும்போது, "கோவை ரயில் நிலையத்தில் 6 நடைமேடைகளில் சுமார் 80 குடிநீர் குழாய் இணைப்புகள் உள்ளன. குடிநீர் கூலர்கள் அனைத்து இடங்களிலும் இல்லை.

கோவை மாநகராட்சியில் இருந்து கிடைக்கும் நீரைத்தான் ரயில் நிலையத்துக்கு முழுமையாக வழங்குகிறோம். மாதந்தோறும் நீரை பரிசோதித்து வழங்குகிறோம். சிஏஜி அறிக்கை தொடர்பாக மத்திய அரசு மற்றும் ரயில்வே துறையின் வழிகாட்டுதல்படி அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும்" என்றனர்.

மாநகராட்சி பொறியாளர்கள் கூறும்போது, "கோவை மாநகராட்சியில் இருந்து ரயில் நிலையம் குடிநீர் பெறலாம். ஆனால் அவர்களிடம் பெறும் குடிநீரை, எப்படி விநியோகம் செய்கிறார்கள் என்பதை பார்க்க வேண்டும்.

'இ-கோலி பாக்டீரியா' பாதிப்பு உள்ளதென்றால், கழிவுநீர் கலந்தால்தான் இந்த பிரச்சினை வரும். குடிநீரை பல்வேறு பரிசோதனைகளுக்கு உட்படுத்திதான், விநியோகத்துக்கு வழங்குகிறோம்" என்றனர்.

# இம்ரான் கானை சிறையிலிருந்து மருத்துவமனைக்கு மாற்ற பாகிஸ்தான் உச்ச நீதிமன்றம் உத்தரவு

இஸ்லாமாபாத்: சிறையில் அடைக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானை, மருத்துவ சிகிச்சைக்காக இஸ்லாமாபாத்தில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு உடனடியாக மாற்ற பாகிஸ்தான் உச்ச நீதிமன்றம் இன்று உத்தரவிட்டது.

பல்வேறு ஊழல் வழக்குகளில் குற்றவாளி என அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் 2023 ஆகஸ்ட் முதல் ராவல்பிண்டியில் உள்ள அடிலாலா சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

உலகக் கோப்பை வென்ற முன்னாள் கேப்டனான இம்ரான் கான் சிறையில் மரணப் படுக்கையில் இருப்பதாகத் தொடர்ந்து வதந்திகள் பரவி வருகின்றன. இந்தச் சூழலில், இம்ரான் கானை மருத்துவ சிகிச்சைக்காக இஸ்லாமாபாத்தில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனைக்கு உடனடியாக மாற்ற பாகிஸ்தான் உச்ச நீதிமன்றம் இன்று (செவ்வாய்க்கிழமை) உத்தரவிட்டது.



அரசின் ஆட்சேபனைகளை நிராகரித்த உச்ச நீதிமன்றம், இம்ரான் கானை 48 மணி நேரத்திற்குள் ஷிஃபா சர்வதேச மருத்துவமனைக்கு மாற்ற உத்தரவிட்டது. அவர் செப்டம்பர் 16 வரை அங்கு இருப்பார். இம்ரான் கானின் தனிப்பட்ட மருத்துவர் மற்றும் அவரது சகோதரி டாக்டர் அலீமா கான் ஆகியோர் அடங்கிய மருத்துவக் குழு ஒன்றும் அவரின் உடல்நிலையை ஆய்வு செய்ய அமைக்கப்படும் என்று உச்ச நீதிமன்ற உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவு குறித்து பேசிய இம்ரான் கானின் ஆலோசகர் ஜுல்பிகார் அலி புகாரி, "இது மிகவும் வரவேற்கத்தக்க உத்தரவு; இது இன்னும் முன்னதாகவே நடந்திருக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். அப்படி நடந்திருந்தால் அவரது கண் மற்றும் பொதுவான உடல்நிலை இவ்வளவு மோசமடைந்திருக்காது," என்று தெரிவித்துள்ளார்.



சென்னைபுனிதஜார்ஜ்கோட்டையில்நடைபெற்ற80வதுசுதந்திரவிழாவில்,சமூகநலன்மற்றும்மகளிர்உரிமைத்துறை சார்பில் மகளிர் நலன் மற்றும் சமூக சேவையில் சிறப்பாகப் பணியாற்றிய சிறந்த தொண்டு நிறுவனத்திற்கான விருது மற்றும் ரூ.1.00 இலட்சத்திற்கான காசோலையினை ஈரோடு அட்சயம் அறக்கட்டளைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 15.08.2026 அன்று வழங்கப்பட்டதைத் தொடர்ந்து தாம் பெற்ற விருது மற்றும் தொகைக்கான காசோலையினை ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அட்சயம் அறக்கட்டளை நிறுவனர் / தலைவர் பெ. நவீன்குமார் மற்றும் குழுவினர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, அவர்களிடம் 17.08.2026 அன்று காண்பித்து வாழ்த்துப்பெற்றார்கள்.



ஈரோடு மாவட்டம், தூக்கநாயக்கன்பாளையம், பெருமுகை ஊராட்சி, சைபன்புதூரில் நாற்றுப்பண்ணையில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, நேற்று (18.08.2026) ஆய்வு மேற்கொண்டார்.



ஈரோடு மாவட்டம், கணக்கம்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க நியாயவிலைக்கடையில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, நேற்று (18.08.2026) ஆய்வு மேற்கொண்டார்.

## வேளாண் குறைதீர்க்கும் நாள் கூட்டம் 21 ந் தேதி நடைபெறவுள்ளது ஈரோடு கலெக்டர் ச.கந்தசாமி தகவல்



ஈரோடு மாவட்டத்தில் ஆகஸ்ட் –2026 ஆம் மாதத்திற்கான வேளாண் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக இரண்டாம் தள கூட்ட அரங்கில் 21.08.2026 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற உள்ளது. அன்றைய தினம் காலை 10.00 மணி முதல் 11.30 வரை மனுக்கள் பெறப்படும். 11.30 மணி முதல் 12.30 மணி வரை விவசாய சங்கப் பிரதிநிதிகள் விவசாயம் தொடர்பான தங்களது பகுதி பிரச்சினைகள் குறித்து கருத்துக்கள் தெரிவிக்கலாம். பிற்பகல் 12.30 முதல் 1.30 முடிய அலுவலர்களின் விளக்கங்களும் தெரிவிக்கப்படவுள்ளது. இக்கூட்டத்தில் விவசாய பெருமக்கள் கலந்துகொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ச. கந்தசாமி தெரிவித்துள்ளார்.

## தென்காசி மாவட்ட ஆட்சியரிடம் ராஜினாமா கடிதம் வழங்கிய கொடிக்குறிச்சி ஊராட்சிமன்ற தலைவரால் பரபரப்பு.



தென்காசி மாவட்ட ஆட்சியரிடம்ராஜினாமா கடிதம் வழங்கிய கொடிக்குறிச்சி ஊராட்சிமன்ற தலைவர் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியவில்லை என குற்றச்சாட்டு

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியம், கொடிக்குறிச்சி ஊராட்சிமன்ற தலைவராக இருந்த உடையார் என்பவர் கடந்த 2023-ம் ஆண்டு காலமானார். இதைத் தொடர்ந்து, துணைத் தலைவராக இருந்த தட்சிணாமூர்த்தி, ஊராட்சிமன்ற தலைவர் பொறுப்புக்கு நியமிக்கபட்டு மக்கள் பணியாற்றி வருகிறார்.

இந்த நிலையில் கடந்த வாரம்பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி சிவராம்பேட்டையில் பொதுமக்களை திரட்டி தர்ணா போராட்டத்தில் ஊராட்சிமன்ற தலைவர் தட்சிணாமூர்த்தி ஈடுபட்டதாக கூறப்படுகிறது இந்தச் சூழ்நிலையில் இன்று தனது ஊராட்சிமன்றதலைவர் பதவியை ராஜினாமா செய்வதாகக் கூறி தென்காசி மாவட்ட ஆட்சியர் ரஞ்ஜீத் சிங்கிடம் தட்சிணாமூர்த்தி கடிதம் வழங்கியுள்ளார்.

அந்த கடிதத்தில், 'எங்கள் கிராமத்தில் பேருந்து நிறுத்தம், குடிநீர் பிரச்சினை, காட்டுநாயக்கர் சமுதாயத்தினருக்கு சாதிச் சான்றிதழ், பஞ்சமி நிலம் மீட்பு தொடர்பாக பலகட்ட முயற்சிகள் எடுத்தும் இதுவரை தீர்க்கப்படவில்லை. அரசியல்வாதிகளாலும், அரசு அதிகாரிகளாலும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியவில்லை என்பதால் ஊராட்சிமன்ற தலைவராக இருந்து என்ற பயலும் இல்லை. அடிப்படை பிரச்சினைகளை தீர்க்க முடியவில்லை என்பதால் ஊராட்சிமன்ற தலைவர்பதவியைராஜினாமா செய்கிறேன்' என்று கூறியுள்ளார்.

இதுகுறித்து தட்சிணாமூர்த்தி கூறும்போது, 'காட்டுநாயக்கர் சமுதாய மக்களுக்கு சாதிச் சான்று வழங்காமல் இருப்பதால் மாணவ, மாணவிகளின் கல்வி பாதிக்கப்படுகிறது.கல்வி நிறுவனம் ஒன்றுக்கு 84 சென்ட் பஞ்சமி நிலத்தை பட்டா போட்டு கொடுத்துள்ளனர். சாதிச் சான்றிதழ் கொடுக்க வேண்டும், பஞ்சமி நிலத்தை மீட்கவேண்டும்,பேருந்து நிறுத்தம்,குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்று பல முறை முயற்சி எடுத்தும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படவில்லை.

பல ஆண்டுகளாக இந்த பிரச்சினைகள் நீடிக்கிறது. இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படாததால் ஊராட்சிமன்ற தலைவர் பதவியை ராஜினாமா செய்து, ஆட்சியரிடம் கடிதம் வழங்கியுள்ளேன் இது குறித்து ஆட்சியர் முடிவு எடுப்பார் எனவும் தெரிவித்தார்.

மக்கள் பிரச்சனைக்கு தீர்வுகாணமுடியாததால் தனது பதவியை ராஜினாமா செய்வதாக ஊராட்சி மன்ற தலைவர் ஆட்சியரிடம் மனு கொடுத்த சம்பவம் தென்காசி மாவட்டத்தில் பரபரப்பு ஏற்படுத்தியுள்ளது ...

## சிபிஐ விசாரணை, கூடுதல் நிதி 3 தமிழர்கள் கொலையில் எட பழனிசாமி வலியுறுத்தல்



சென்னை: "கர்நாடகாவில் 3 தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட விவகாரத்தில், சிபிஐ விசாரணை வேண்டும், உயிரிழந்தவர்கள் குடும்பத்துக்கு தமிழக அரசு கூடுதல் நிதி அறிவிக்க வேண்டும்," என்று தமிழக சட்டப்பேரவையில் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தினார்.

கர்நாடக மாநிலம் சாம் ராஜநகர் மாவட்டம் ஹனூர் அருகே யுள்ள காவிரி வன விலங்கு சரணாலய பகுதியில் கடந்த 15-ம் தேதி அதிகாலையில் மானை வேட்டைதோணி சாமி (50), ஜான்ரோஸ் பீட்டர் (42), லாசர் குமார் (33) ஆகிய மூவரும் அம்மாநில வனத்துறையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இது தொடர்பாக தமிழக சட்டப்பேரவையில் இன்று கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

இந்தத் தீர்மானத்தின் மீது பல்வேறு கட்சியின் சட்டப்பேரவை உறுப்பினர்களும் தங்களது கருத்தை முன்வைத்தனர். அவற்றின் தொகுப்பு வருமாறு:

அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, "பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் தனதுகால்நடைதேடிச்சென்ற 3 தமிழர்கள் சுட்டுக்கொலை, ஒருவர் படுகாயத்துடன் சிகிச்சை பெற்று வருகிறார். மான் வேட்டையில் ஈடுபட்டதாக 3 தமிழர்களை குற்றம்சாட்டி கொன்றுள்ளது கர்நாடக வனத்துறை.

2 மாநில எல்லை பகுதியில் கொலை நடைபெற்றுள்ளதால் சம்பவம் தொடர்பாக சிபிஐவிசாரணைதேவை. வனத்துறை சுட்டுக்கொன்ற தமிழர்கள் குடுபங்களுக்கு ரூ.5 லட்சம் மட்டுமே இழப்பீடு அறிவிப்பு, தமிழக அரசு கூடுதலாக நிதி தர வேண்டும். இதுபோன்றசம்பவங்கள் மீண்டும் தொடராத வகையில் கர்நாடக அரசுடன் தமிழக அரசு பேச வேண்டும்." என்று வலியுறுத்தினார்.

முன்னதாகப் பேசிய திமுக எம்எல்ஏ மனோஜ் பாண்டியன் பேசினார். அப்போது அவர், "கர்நாடகாவில் கால்நடை தேடிச்சென்ற 3 தமிழர்களை அம்மாநில வனத்துறையால் போலி என்கவுன்ட்டர் செய்யப்பட்டுள்ளனர். அப்பாவி விவசாயிகளை வனத்துறை சுட்டுக்கொன்றது மனித உரிமை மீறல். பாதிக்கப்பட்ட தமிழர்களின் குடும்பங்களுக்கு அரசு வேலையும், உரிய நிவாரணமும் வழங்க வேண்டும்" என்றார்.

பாமக எம்எல்ஏ கணேஷ்குமார் பேசும்போது, "கர்நாடகாவில் 3 தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்டவழக்கை சிபிஐ விசாரிக்க வேண்டும். தமிழர்களுக்கான நியாயம், நிவாரணம், நீதி கிடைக்க சிபிஐ விசாரணை நடத்த வேண்டியது அவசியம். பாதிக்கப்பட்ட தமிழர்களின் குடும்பத்துக்கு நிதி உதவியாக ரூ.1 கோடி வழங்க வேண்டும்," என்று வலியுறுத்தினார்.

முன்னதாக, கர்நாடக வனப் பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்ட 3 தமிழர்களின் உடல்களும் இறுதி திருப் பலிக்கு பின்னர், அவர்களின் சொந்த கிராமங்களில் நேற்று அடக்கம் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்திய கம்யூனிஸ்ட் எம்எல்ஏ டி.ராமச்சந்திரன் பேசுகையில், "தமிழர்களின் உயிரை துப்பாக்கி குண்டுகள் தீர்மானிக்கக்கூடாது. சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட கர்நாடக அரசுக்கு தமிழக அரசும் நம்முதல்வரும்அழுத்தம் கொடுக்க வேண்டும்." என்றார்.

## ராமேசுவரம் மீனவர்கள் ஆக.30 முதல் தொடர் போராட்டம்



ராமேசுவரம்: இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ள மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி ராமேசுவரம் மீனவர்கள் தொடர் போராட்டங்களை அறிவித்துள்ளனர்.

ராமேசுவரம் மீன்பிடித் துறைமுகம் அருகே மீனவர்களின் அவசர ஆலோசனை கூட்டம் மீனவ பிரதிநிதி சேசுராஜா தலைமையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், கடந்த ஒரு மாத காலத்தில் ராமேசுவரம் விசைப்படகுகள் 3 கைப்பற்றப்பட்டு 29 மீனவர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் ஆறு மாதம், ஓர் ஆண்டு, இரண்டு ஆண்டுகள் சிறை தண்டனை பெற்று தண்டனை கைதிகளாக 30-க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் உள்ளனர். இவர்களை விடுதலை செய்ய மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

நீண்ட காலமாக இருந்து வரும் இந்திய - இலங்கை மீனவர் பிரச்சினைக்கு நிரந்திர தீர்வு காண்வதற்கு, கடந்த 10 ஆண்டுகளாக நடைபெறாமல் உள்ள இந்திய - இலங்கை மீனவர்களின் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும்.

கடந்த 2018-ம் ஆண்டிலிருந்து 2026-ம் ஆண்டு வரையிலும் இலங்கை கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்டு விடுவிக்கப்படாமல் உள்ள விசைப் படகுகளுக்கு மத்திய, மாநில அரசுகள் நிவாரணம் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

றுத்தி ஆகஸ்ட் 30 முதல் தொடர் வேலை நிறுத்தப் போராட்டமும், செப்டம்பர் முதல் தொடர் உண்ணா விரதப் போராட்டமும் நடத்துவது என தொடர் போராட்டங்களை அறிவித்துள்ளனர்.

## Top cop in Bihar's Siwan transferred amid row over AK47 at student protest



The Bihar government has transferred Siwan Superintendent of Police Puran Kumar Jha following the controversy over the use of an AK-47 by a police constable during student protests in the district on July 25.

In a major reshuffle, the Bihar government on Tuesday transferred 17 senior IPS officers, including the SPs of Bhojpur and Siwan, where police action had sparked controversy. The constable who allegedly fired the rifle in Siwan has already been suspended.

Jha has been placed on the waiting list for a new posting. Bharat Soni has been appointed as the SP of Siwan to replace him.

The SP of Bhojpur, where the encounter of local activist Bharat Tiwari had triggered an outcry, has also been transferred. According to the government circular, Awadesh Dikshit has been appointed the new SP of the Bhojpur district.

Tejashwi Yadav raises questions

Leader f Opposition in the Bihar Assembly, Tejashwi Yadav, questioned how a constable deployed during a student protest obtained an AK-47 and which unit or armoury issued it.

The RJD leader also asked who authorised the issue of the weapon and whether the complete command chain involved in allocating a modern weapon such as an AK-47 should be examined.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.